14.06.2024

O.S.No.193/2019

வா.சா.1.திரு.செல்லபாண்டி த.பெ.பாண்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துளளேன். எனது சொந்த ஊர் சூரக்குண்டு தற்போது நான் மதுரை பிபி குளத்தில் வசித்து வருகிறேன். நான் வசிக்கும் பகுதிக்கும் தாவா சொத்திற்கும் இடையே சுமார் 4 கிலோ மீட்டர் துாரம் உள்ளது. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் மேல்நிலை பள்ளிக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அந்த பள்ளியின் மைதானம் என்றாலும் சரியல்ல, பள்ளியின் மைதானம் தனியாக உள்ளது. தாவா சொத்தில் கட்டுப்பட்ட சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவை கோபாலகிருஷ்ண கோன் மேல்நிலைபள்ளி விளையாட்டு மைதானம் அல்ல என்றால் சரிதான். நான் பிளாட் எண்.24ல் பாதியும் பிளாட் எண்.25ம் கிரையம் பெற்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது தான் தாவா சொத்து அமைந்துள்ள இடம் என்றால் சரிதான், (அந்த புகைப்படம் பி.வா.சா**.**ஆ**-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**. மேற்படி பி.வா.சா.ஆ-1 புகைப்படத்தில் காணப்படும் இடம்விளையாட்டு மைதானமாக தான் காணப்படுகிறது என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படத்தில் உள்ள இடத்திற்கு அருகே பள்ளி கட்டிடம் உள்ளது என்றால் சரியல்ல, கழிவறை தான் உள்ளது.

2. தாவா சொத்து ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை விளையாட்டு மைதானமாகதான் உள்ளது என்றாலும், வீட்டு மனையாக பிரித்து கற்கள் ஊன்றப்பட்டதாக இருந்ததில்லை என்றாலும், சரியல்ல, 2019க்கு முன்பு வரை பி.வா.சா.ஆ-1ல் உள்ள சொத்து பிளாட் பிரிக்கப்பட்டு கற்கள் ஊன்றப்பட்டு இருந்தது, அதன்பின்பு தற்போது பி.வா.சா.ஆ-1ல் காணப்படுவது போல் கற்கள் எதுவும் இல்லாமல் காலியாக தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை என்னால் தற்போது அடையாளப்படுத்த இயலாது என்றால் சரியல்ல அடையாளப்படுதத முடியும் கழிவறைக்கு அருகில் உள்ளது. தாவா சொத்து கழிவறைக்கு அருகே அமைந்துள்ளது என்று எனது பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விளையாட்டு மைதானமாகதான் உள்ளது என்றாலும், நான் கூறுவது போல் கழிவறைக்கு அருகே வீட்டு மனையாக இல்லை என்றாலும் சரியல்ல. என்னோடு சேர்த்து மொத்தம் சுமார் 15 நபர்கள் வழககு தாக்கல் செய்துள்ளோம், நாங்கள் அனைவரும் ஒரே வழக்கறிஞரை நியமனம் செய்து வழக்கு நடத்துகிறோம் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் வழக்கு நடவடிக்கைகள் பற்றி தினந்தோறும் பேசிக்கொள்வோம் என்றால் சரிதான். தாவா சொத்து சிறுதுார் கிராம சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகிய சர்வே எண்களில் கட்டுப்பட்டது என்றால் சரிதான்.

3. தாவா சொத்து இஎம்ஜி கோபாலகிருஷ்ண கோன் பள்ளிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ஆரம்பத்தில் பாத்தியப்பட்டது, அதன்பின்பு அய்யானக்கு பவர் கொடுக்கப்பட்டது. தாவா சொத்தில் 4 கேட் உள்ளன என்றால் சரியல்ல, ஒரே கேட்தான் உள்ளது, தாவா சொத்திற்குள் போகவிடாமல் முள்களை வெட்டி அடைத்து விட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தாவா சொத்தினை

சுற்றிலும் முள்கம்பிவேலி அமைத்தாக காணப்படுகிறது என்றால் சரிதான். (அந்த புகைப்படம் பி.வா.சா.ஆ-**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**. இந்த முள்கம்பிவேலி அமைத்ததை ஆட்சபேணை செய்த போதுதான் தாவா சொத்திற்கான பிரச்சினை எழுந்தது. தாவா சொத்தினை சுற்றிலும் முள்கம்பி வேலி அமைக்கப்பட்டு 4 கேட் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞரை ஆணையராக நியமித்து பார்த்தால் 4 கேட் உள்ளது தெரியவரும் என்றால் தாராளமாக நியமிக்கலாம். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-2 புகைப்படத்தில் உள்ள தாவா சொத்திற்கான அமைப்பினை 4 ஆண்டுகளுக்கு நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். 4 ஆண்டுகளாக நான் தாவாசொத்தினை சென்று பார்த்தில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விளையாட்டு மைதானமாகவும், பள்ளி விடுதியாகவும் அதனைச்சுற்றி கம்பிமுள்வேலி அமைத்தும், காணப்படுகிறது என்றால் சரியல்ல, கட்டிடம் எதுவும் இல்லை, காலியிடமாக உள்ளது.

4. தாவா சொத்து விளையாட்டு மைதானமாக இருந்து பள்ளி மாணவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் 5 ஆண்டுகளுக்குள் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது, அதற்கு முன்பு அவ்வாறு விளையாட்டு மைதானமாக இல்லை. தாவா சொத்து கோபாலகிருஷ்ண கோன் பள்ளி சுமார் 50 ஆண்டு காலமாக இயங்கி வருகிறது என்றால் இருககலாம் என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்தினை தவிர கோபாலகிருஷ்ண கோன் பள்ளிக்கு வேறு விளையாட்டு மைதானம்கிடையாது என்றால் சரியல்ல, உள்ளது, அவர்கள் இடத்திற்குள்ளேயே விளையாட்டு மைதானம் உள்ளது. நான் கூறுவது பொய்யான சங்கதி என்றாலும், பி.வா.சா.ஆ-1ல் காணப்படும் தாவாசொத்து தான் கோபாலகிருஷ்ண கோன் பள்ளிக்கு காணப்படும் விளையாட்டு மைதானம் என்றாலும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ-1 விளையாட்டு மைதானத்திற்குள் பள்ளி நிர்வாகம் மற்றும் பிரதிவாதி அனுமதி இல்லாமல் நுழைய முடியாது என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு நுழைய முடியாது.

5. பி.வா.சா.ஆ-2ல் காணப்படும் கம்பிமுள்வேலி அமைத்து சுமார் 5 ஆண்டுகள் ஆகின்றது. நான் கூறுவது பொய்யான சங்கதி என்றாலும், அந்த முள்வேலி அமைத்து 15 ஆண்டுகள் இருக்கும் என்றாலும், அதை தெரிந்து கொண்டே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் தாவா சொத்து நஞ்சையா, புஞ்சையா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய போது வீட்டுமனையாக இருந்தது. பிரதிவாதிகளை நான் கிரையம் வாங்கியது முதல் தெரியும். நான் கிரையம் வாங்கி சுமார் 25 ஆண்டுகள் ஆகின்றது. அப்போது இளம்ஜி சௌந்திராஜனை எனக்கு தெரியும், அவர்களை தவிர வேறு யாரையும் தெரியாது. கடந்த 5 ஆண்டுகளாகத்தான் பிரதிவாதிகளை தெரியும். பிரதிவாதிகளுக்கு கல்லூரி, பள்ளி ஆகியவை உள்ளது என்றால் சரிதான். அவர்களுக்கு நிறைய நில புலன்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இளம்ஜி சௌந்திராஜனை 25 ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் என்று சொல்லிவிட்டு அவர்களுக்கு சொந்தமான நில புலன்கள் தெரியாது என்று சொல்வதது இந்த வழக்கிற்காக சொல்லப்படும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல்

செய்துள்ள பிளாட்டுகள் அய்யனார் என்பவரிடம் இருந்து அவர் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் எங்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார்.

6. அய்யாரை பார்த்துள்ளேனா என்றால் பத்திரம் பதிவு செய்த அன்று நான் பார்த்துள்ளேன். அய்யனார் பவர் பெற்றதாக சொல்லப்படும் பொது அதிகார ஆவணத்தின் அசலை நான் பார்த்தில்லை என்றால் சரிதான், ஆனால் அதன் நகலை நான் பார்த்துள்ளேன். தாவா சொத்தினை நான் கிரையம் வாங்கிய போது அய்யனார் பவர் பத்திரமும், கிரைய பத்திரமும் தாவா சொத்திற்கான மூல பத்திரங்கள் பார்த்தேனா என்றால் அசலை பார்க்கவில்லை, நகலை பார்த்தேன். இளம்ஜி சௌந்திராஜன் ஒருபோதும் அய்யனாருக்கு வா.சா.ஆ-1 பொது அதிகார பத்திரமோ, 20.04.1996ம் தேதிய கிரைய ஆவணமோ எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அதற்கான அவசியமும் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ-1 பொது அதிகார ஆவணம் எங்கு பதியப்பட்டது என்று தெரியுமா என்றால் சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. சிறுதூர் கிராம சொத்துக்களை பொறுத்த வரை அந்த காலகட்டங்களில் சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில்தான் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். அதே போல் சிறுதூர் கிராம கிரையத்தினையும் சொக்கிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் அந்த காலகட்டங்களில் பதிவுசெய்ய வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. அய்யனார், இளம்ஜி சௌந்திராஜனிடம் இருந்து 20.04.1996 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுப்படும் கிரைய ஆவணமானது, கேரளா மாநிலம் பாறசாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் மேற்படி கிரையம் கேரளாவில் உள்ள பாறசாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அய்யனார், இளம்ஜி சௌந்திராஜன் என்பவரது கையொப்பத்தினை மோசடியாக உற்பத்தி செய்து சிறுதூர் கிராம சர்வே எண்.169/1 மற்றும் சர்வே எண்.169/2 ஆகியவற்றில் அடங்கிய சொத்துக்களை அபகரிக்கும் நோக்கில் அந்த சொத்திற்கான பதிவு அலுவலகம் மதுரை மாவட்டம் சொக்கிகுளத்தில் இருக்கும் போது, கேரளாவில் உள்ள பாறசாலையில் 20.04.1996 தேதியிட்டகிரைய ஆவணத்தினை மோசடியாக பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது)